**செய்தி வெளியீடு எண்: 689** **நாள்:20.11.12**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த மண்டல மேலாளர்களின் இரண்டு நாள் ஆய்வுகூட்டம் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்களின் தலைமையில் சென்னை தலைமை அலுவலகத்தில் இன்று (20.11.2012) நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மகத்தான திட்டமான விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சராசரியாக 3 இலட்சத்து 10 ஆயிரம் மெ.டன் அரிசி 33,456 நியாய விலை அங்காடிகள் மூலம் வழங்கப்படுகிறது. இது தவிர சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் ஆகியவையும், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியனவும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

நடப்பு 2012–13 காரீப் நெல் கொள்முதல் பருவத்தில் தஞ்சாவூர், திருவாரூர், மாவட்டங்களில் தலா 42 வீதம் 84 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை விவசாயிகளிடமிருந்து நேரடியாக 1367 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச ஆதார விலையான ரூ.1280/– உடன் ரூ.70/– ஊக்கத்தொகையாகவும், சாதா ரக நெல்லுக்கு ரூ.1250/– உடன் ரூ.50/– ஊக்கத்தொகையாகவும் வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விவசாயிகள் தங்கள் நெல்லை விற்பனை செய்வதற்குத் தேவையான இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

நவம்பர் 2012 மாதத்தில் 19.11.2012 வரை 2இலட்சத்து 85 ஆயிரம் மெ.டன் விலையில்லா அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. குடிமைப் பொருள் வழங்கல் துறை ஆணையாளரின் மாதாந்திர ஒதுக்கீடான 13,915 மெ.டன் துவரம்பருப்பில் இன்று வரை

9 ஆயிரத்து 314 மெ.டன் துவரம்பருப்பு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. உளுத்தம்பருப்பு 10,430 மெ.டன் ஒதுக்கீட்டில் இன்று வரை 9,129 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 4,601 மெ.டன் துவரம் பருப்பும், 1,301 மெ.டன் உளுத்தம் பருப்பும் இம்மாதம் 25ம் தேதிக்குள் நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு மாத இறுதிவரை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பாமாயிலை பொறுத்தவரையில் 18.11.2012 வரை 44 இலட்சத்து 20 ஆயிரம் செறிவூட்டப்பட்ட பாமாயில் பாக்கெட்டுகள் நவம்பர் மாதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒதுக்கீட்டினை நிறைவு செய்வதற்கு மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் மூலமாக இறக்குமதி செய்யப்படுகின்ற பாமாயில் கப்பல் ஒன்று 6 ஆயிரம் மெ.டன் (சுமார் 70 இலட்சம் பாக்கெட்டுகள்) பாமாயிலுடன் சென்னை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது. மேலும், 4 ஆயிரம் மெ.டன் பாமாயிலுடன் (45 இலட்சம் பாக்கெட்டுகள்) 2வது கப்பல் தூத்துக்குடி துறைமுகத்திற்கு இன்னும் ஓரிரு நாளில் வர இருக்கிறது. இதைத்தவிர 7,500 மெ.டன் பாமாயில் கொண்ட கப்பல் ஒன்று (83 இலட்சம் பாக்கெட்டுகள்) சென்னை துறைமுகத்திற்கு இந்த வாரத்தில் வர இருக்கிறது. குடும்ப அட்டைதாரர்களுக்கு இம்மாத பாமாயில் ஒதுக்கீடு முழுவதையும் குறைவின்றி வழங்க, அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மண்டல மேலாளர்களுக்கு அறிவுரை வழங்கிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கூறுகையில், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற தமிழ்நாட்டில் மட்டும் தான் 4,900 கோடி ரூபாய் உணவு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர அரிசி, புளி, மிளகாய், போன்ற அத்தியாவசியப் பொருட்களின் வெளிச்சந்தை விலை கட்டுப்பாட்டின்றி உயரும் பொழுது அதைக் கட்டுப்படுத்தும் வகையில் ரூ.50 கோடி நிதியுடன் விலை கட்டுப்பாட்டு நிதியம் ஒன்று செயல்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பொது விநியோகத் திட்ட விநியோக கிடங்குகளிலிருந்து நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்கள் தரமானதாகவும், எடை குறைவின்றியும் வழங்கப்படுவதை மண்டல மேலாளர்கள் தொடர் கண்காணிப்பின் மூலம் உறுதி செய்ய வேண்டும். சம்பா 2013 நெல் கொள்முதல் துவங்கும் வரையில் அடுத்த மூன்று மாதங்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கும், பொங்கல் பண்டிகை காலங்களில் தேவைப்படும் பச்சரிசி தேவையை பூர்த்தி செய்யவும் இந்திய உணவுக் கழகத்திலிருந்து போதுமான பச்சிரிசியை பெற்று இருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களை அமைச்சர் அறிவுறுத்தினார். மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் புழுங்கல் மற்றும் பச்சரிசியை உடனுக்குடன் தரம் சரிபார்த்து இயக்கம் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களின் செயல்பாட்டினை உன்னிப்பாக கவனித்து வர வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் ஒதுக்கீட்டினை முடிக்காத அல்லது மந்த நிலையில் இயக்கம் செய்யும் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களின் நியமனத்தை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மண்டல மேலாளர்களை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். இதனை சீரிய முறையில் கண்காணிக்க தவறும் அலுவலர்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கடத்துவதற்கு உடந்தையாக இருக்கும் அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலிருந்து அங்காடிகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள், அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் (Route Chart) மட்டுமே செல்கிறதா என்பதை மண்டல மேலாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு கண்காணிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்கள் நகல் ஒன்று ஒட்டுநரிடம் இருக்க வேண்டும். திருவள்ளூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் லாரிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கும் GPS (Global Positioning System) நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டு GPS கருவிகள் பொருத்தப்பட்ட லாரிகளைத் தவிர

வேறு லாரிகளில் அத்தியாவசியப் பொருட்கள் ஏற்றிச் செல்ல அனுமதிப்பதில்லை என்றும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்படி அரசின் செயல் திட்டங்களின் முழுப்பயன்களும் ஏழை, எளிய நடுத்தர மக்களை சென்றடைய வேண்டுமென்றும் அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவது இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டுள்ளது என்றும், சட்டம் தன் கடமையை சரியாக செய்யும், இப்பணியில் எவ்விதமான குறுக்கீட்டையும் பொறுத்துக் கொண்டது இல்லையென்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் 16.04.2012 புது டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்தார்கள். இதன்படி 16.05.2011 முதல் 18.11.2012 வரை 36,202 குவிண்டால் கடத்தல் அரிசி கைப்பற்றப்பட்டு 13,034 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 7,653 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் 316 நபர்கள் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கொள்முதல் செய்யப்படும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தரமானதாக விநியோகம் செய்யப்படும் வகையில் அவற்றை பாதுகாப்பாக சேமிப்பில் வைக்கும் பொருட்டு பொது விநியோகத் திட்ட கிடங்குகள் தூய்மையாக பாரமரிக்கப்படும். கிடங்குகளில் சேமிப்பு கொள்ளளவை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி ரூ.51.70 கோடி மதிப்பீட்டில் 67 இடங்களில் விஞ்ஞான ரீதியான சேமிப்பு கிடங்குகளும், ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் 25 நெல் கொள்முதல் நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

குடும்ப அட்டைகளுக்கு எல்லா வேலை நாட்களிலும் அனைத்து பொருட்களும் ஒரே சமயத்தில் கிடைத்திட மண்டல மேலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் கீழ் இயங்குகின்ற உணவுத்துறை சிறப்பாக செயல்படவும் அனைத்து அலுவலர்களும் அயராது பாடுபடவேண்டுமென்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் குடிமைப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் திரு. பி.எம்.பஷீர் அஹமது, இ.ஆ.ப., குடிமைப் பொருள் கடத்தல் தடுப்பு காவல் கூடுதல் இயக்குநர் திரு. கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**